இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்பின் பிரகாரம்
ஆசிரியர் வினைத்திறன் தடைதாண்டல் - 02

# தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம்

இதவடிவம் - 05

ஆசிரியர் கல்வி நிர்வாகக் கிளை
கல்வி அமைச்சு
இசுருபாய
பத்தரமுல்ல

## இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்பின் பிரகாரம்
## ஆசிரியர் வினைத்திறன் தடைதாண்டல் - 02
## தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம்

**இதவடிவம் - 05**

| இதவடிவத்தின் பெயர் | **தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம்** |
|---|---|
| **நோக்கங்கள்** | **1. தலைமைத்துவ திறன்களை வளர்த்துக் கொள்ளுதல்.**<br>மூலோபாய சிந்தனை, தீர்மானம் எடுத்தல், குழுக்களை கட்டியெழுப்புதல் மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல் போன்ற முக்கிய தலைமைத்துவ திறன்களை ஆசிரியர்களுக்கு வழங்குதல்.<br>**2. போதனா தலைமைத்துவத்தை மேம்படுத்துதல்.**<br>ஆசிரியர்களுக்கு கல்வி நடைமுறைகளை வழிநடத்தவும், சக ஆசிரியர்களுடன் ஒத்துழைப்பை ஆதரிக்கவும், மாணவர்களின் கற்றல் விளைவுகளை மேம்படுத்தவும் ஆற்றலைப் பெற்றுக்கொடுத்தல்.<br>**3. நெறிமுறை தலைமைத்துவத்தை வளர்த்தல்**<br>தனிப்பட்ட மற்றும் வாண்மைத்துவ விருத்தியில் சுய விழிப்புணர்வு மற்றும் நெறிமுறைசார் தீர்மானம் மேற்கொள்ளவதை ஊக்குவித்தல்.<br>**4. கல்விக் கொள்கைகள் மற்றும் நிர்வாகத்தைப் புரிந்துகொள்ளல்.**<br>பாடசாலை முகாமைத்துவக் கட்டமைப்பில், கல்விக் கொள்கைகள் மற்றும் தலைமைத்துவ வகிபாகம் மற்றும் அவற்றின் தாக்கங்கள் பற்றிய அறிவை ஆசிரியர்களுக்கு வழங்குதல்.<br>**5. மாற்று முகாமைத்துவ திறன்களை வலுப்படுத்துதல்.**<br>விஷேடமாக கல்வி சீர்திருத்தங்கள் அல்லது புத்தாக்கங்களுக்கு எதிர்கொள்ளும் வகையில் பாடசாலைகளுக்குள் மாற்றங்களுக்கான முயற்சிகளை வழிநடத்தவும் முகாமை செய்யவும் ஆசிரியர்களைத் தயார்படுத்துதல்.<br>**6. கூட்டுத் தலைமைத்துவத்தை (Collaborative Leadership) ஊக்குவித்தல்.**<br>குழுச் செயற்பாடு, தொழில்சார் கற்றல் சமூகங்கள் மற்றும் பாடசாலை மேம்பாட்டில் பங்குதாரர்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.<br>**7. நேர மற்றும் வள முகாமைத்துவத்தை மேம்படுத்துதல்.**<br>பாடசாலை செயல்பாடுகளை மேம்படுத்த பயனுள்ள திட்டமிடல். முன்னுரிமை மற்றும் வள ஒதுக்கீட்டு உத்திகளைக் கற்பித்தல். |

| | |
|---|---|
| | **8. தரவுகளின் அடிப்படையில் முடிவெடுத்தல்.**<br>கற்பித்தல் மற்றும் நிர்வாக முடிவுகளைத் தெரிவிக்க தரவுகளையும் ஆதாரங்களையும் பயன்படுத்த ஆசிரியர்களை உட்படுத்தல்.<br>**9. எதிர்கால தலைமைத்துவ வகிபாகங்களுக்கான திறன் மேம்பாடு.**<br>திணைக்களத் தலைவர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அதிபர்கள் உள்ளிட்ட நடுத்தர மற்றும் உயர் தலைமைப் பதவிகளுக்கு ஆசிரியர்களை தயார்படுத்தல்.<br>**10. தொலைநோக்கு மற்றும் மாற்றத்திற்கான தலைமைத்துவ திறன் மேம்பாடு.**<br>சிறந்த கல்விக்கான தெளிவான தொலைநோக்கினை வளர்த்து, தொடர்புகொள்வதற்கு மற்றும் கட்டமைப்புரீதியான மேம்பாடுகளுக்காக ஆசிரியர்களை ஊக்குவித்தல். |
| **கற்றல் பேறுகள்** | 1. தலைமைத்துவக் கோட்பாடுகளைப் பற்றி புரிந்துகொண்டு, அவற்றை யதார்த்த உலக கல்வி அமைப்புகளுக்குப் பயன்படுத்திக்கொள்வார்.<br>2. கற்பித்தல் நுட்பங்களை மேம்படுத்துவதிலும் மாணவர் அடைவுகளை மேம்படுத்துவதிலும் போதனா தலைமைத்துவத்தின் கடமைகளைப் பகுப்பாய்வு செய்வார்.<br>3. திட்டமிடல், வள ஒதுக்கீடு மற்றும் நேர முகாமைத்துவம் உட்பட விளைதிறனான பாடசாலை முகாமைத்துவத்தில் அடிப்படைக் கொள்கைகளைப் பயன்படுத்துவார்.<br>4. கல்விக் கொள்கைகள் மற்றும் நிர்வாகக் கட்டமைப்புகளை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்து, பாடசாலைத் தலைமைத்துவத்திலும் வகுப்பறைப் பயன்பாட்டிலும் அவற்றின் தாக்கத்தை விளங்கிக்கொள்வார்.<br>5. பங்குதாரர்களின் ஒத்துழைப்போடு தீர்மானம் எடுத்தலை உள்ளடக்கி, பாடசாலை முன்னேற்றத்திற்காக திட்டமிடுவார்.<br>6. தலைமைத்துவ தீர்மானங்களை தெரிவிக்கவும் நிறுவன வினைத்திறனை மேம்படுத்தவும் தரவு மற்றும் சான்றுகள் சார்ந்த உத்திகளைப் பயன்படுத்துவார்.<br>7. குழுக்களை வழிநடத்தும் போதும் மாற்றங்களை முகாமை செய்யும் போதும் வலுவான தொடர்பாடல், ஆளிடைத் தொடர்பு மற்றும் முரண்பாடு தீர்வுத் திறன்களை வெளிப்படுத்துவார்.<br>8. சமத்துவம், பல்வகைமை மற்றும் மாணவர்மையக் கற்றலின் முக்கியத்தும் உள்ளடங்கிய, நெறிமுறை மற்றும் தொலைநோக்கு தலைமைத்துவத்தை ஊக்குவிப்பார். |

| உள்ளடக்கம் | |
|---|---|
| | **1.0. தலைமைத்துவம் என்றால் என்ன?**<br>1.1 தலைமைத்துவம் பற்றி முன்வைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்கள்<br>1.2. தலைமைத்துவத்தின் தன்மை மற்றும் பண்புகள்<br>1.3. தலைமைத்துவத்தின் கடமைகளும் பொறுப்புகளும்<br>1.4. பல்வேறு தலைமைத்துவ பாணிகள்<br>1.5. தலைமைத்துவத்தின் சவால்கள்<br>1.6. போதனா தலைமைத்துவம்<br>1.7. 21ம் நூற்றாண்டு தலைவரின் குணப் பண்புகள்<br><br>**2.0 ஆளுமை என்றால் என்ன?**<br>2.1. ஆளுமை தொடர்பான வரைவிலக்கணங்கள்<br>2.2. ஆளுமை விருத்தி.<br>2.3. ஆளுமை விருத்தியின் தன்மை<br>2.4. ஆளுமை மேம்பாட்டு உத்திகள்<br>2.5. ஆசிரியர்களின் ஆளுமையை விருத்தி செய்வதன் முக்கியத்துவம்<br><br>**3.0. முகாமைத்துவம் என்றால் என்ன?**<br>3.1. முகாமைத்துவம் தொடர்பான வரைவிலக்கணங்கள்<br>3.2. முகாமைத்துவ கோட்பாடுகள் மற்றும் அவற்றின் பின்னணி<br>3.3. பல்வேறு முகாமைத்துவப் பாணிகளை அறிந்து கொள்ளல்<br>3.4. மாற்று முகாமைத்துவம்<br>3.5. ஜோன் கோட்டரின் மாற்ற மாதிரி<br>3.6. மாற்று முகாமைத்துவத்தின் பிரதான குண இயல்புகள்<br>3.7. மாற்று முகாமைத்துவத்தின் அடிப்படைகள் |

| | |
|---|---|
| | **4.0 கல்வி முகாமைத்துவம் என்றால் என்ன?**<br><br>4.1. கல்வி முகாமைத்துவத்தின் கடமைகள்<br><br>4.2. கல்வி முகாமைத்துவம் மற்றும் கல்வி நிர்வாகத்திற்கு இடையிலான வேறுபாடு.<br><br>4.3. முகாமைத்துவ எண்ணக்கருக்களை கல்வி அபிவிருத்திக்காக பயன்படுத்தும் முறை<br><br>4.4. வகுப்பறை முகாமைத்துவத்தில் பயன்படுத்தக்கூடிய முகாமைத்துவ அணுகுமுறைகள்<br><br>4.5. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் கல்வி முகாமைத்துவத்தின் முக்கியத்துவம்<br><br>*மேலே குறிப்பிடப்பட்டுள்ள உள்ளடக்கங்களுக்கு மேலதிக தேடல் பரிந்துரைக்கப்படுகிறது.* |
| **கற்றல் முறை** | சுய கற்றல் |
| **உசாத்துணைகள்** | 1.Gold, Jeffrey, Thorpe, Richard and Mumford, Alan. Leadership and management development, (Chartered Institute of Personnel and Development, 2010)<br>2. සිල්වි සේනාධීර, අධ්‍යාපන විෂයානුබද්ධ නායකත්ව සංවර්ධනය, 2002 ගොඩගේ ප්‍රකාශන<br>3. දයාරෝහණ අතුකෝරාල, කළමනාකරණ මූලධර්ම සහ සිද්ධි අධ්‍යයනය, 2005 සික්ෂා මන්දිර ප්‍රකාශන<br>4. කේ.ජී. දිසානායක, අධ්‍යාපන පරිපාලන න්‍යායන් 2010, සරසවි ප්‍රකාශකයෝ<br>5. John P. Kotter, Leading change 1996 Harvard Business School<br>6.Jo Blasé, Handbook of Instructional Leadership: How Successful Principals Promote Teaching and Learning, SAGE Publications, Nov 5, 2003<br>7. අධ්‍යාපන කළමනා, ජාතික අධ්‍යාපන ආයතනයේ ප්‍රකාශන<br>8. පර්යේෂණ ග්‍රන්ථ, ප්‍රධාන පුස්තකාලය, ජාතික අධ්‍යාපන ආයතනය, මහරගම සහ මීපේ අධ්‍යාපන නායකත්ව සංවර්ධන මධ්‍යස්ථානය<br><br>**பிரதான நூலகம்**<br>• தேசிய கல்வி நிருவகம் - மஹரகமை.<br>• கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மத்திய நிலையம் - மீபே. |